# 19 ஜூலை 2023 தினசரி நடப்பு நிகழ்வுகள்

## செய்திகளில் இடம் பெற்ற மனிதர்கள்

### உத்தரபிரதேச மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் (UPERC) தலைவராக அரவிந்த் குமாரை உ.பி அரசு நியமித்துள்ளது.



- ❖ உத்தரபிரதேச மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் (UPERC) புதிய தலைவராக ஓய்வுபெற்ற ஐஏஎஸ் அதிகாரி அரவிந்த் குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.
- ❖ அவர் நியமனம் செய்யப்பட்ட நாளிலிருந்து ஐந்து வருட காலத்திற்கு அல்லது அவர் 65 வயதை அடையும் வரை, எது முந்தையதோ அதுவரை நியமிக்கப்படுவார்.

### உத்தரபிரதேச மின்சார ஒழுங்குமுறை ஆணையம் (UPERC).

- ❖ உத்தரபிரதேசத்தில் உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் தடையில்லா மற்றும் செலவு குறைந்த மின்சாரம் கிடைக்கும் வகையில் மின் துறையை ஒழுங்குபடுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இதன் தலைமையகம் லக்னோவில் உள்ளது.

## மாநாடுகள் மற்றும் ஒப்பந்தம்

- ❖ இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம், சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம், 2023 ஜூலை 20–21 தேதிகளில் புது தில்லியில் உலகளாவிய உணவு ஒழுங்குமுறை உச்சி மாநாட்டை நடத்துகிறது.
- ❖ இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம், சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம், ஜூலை 20–21, 2023 அன்று புது தில்லியில் உலகளாவிய உணவு ஒழுங்குமுறை உச்சி மாநாட்டை நடத்துகிறது.
- ❖ இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் (FSSAI) என்பது சுகாதார அமைச்சகத்தின் கீழ் நிறுவப்பட்ட ஒரு சட்டப்பூர்வ அமைப்பாகும்.
- ❖ இது உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைச் சட்டம், 2006ன் கீழ் நிறுவப்பட்டது.
- ❖ இது இந்தியாவில் உணவு பாதுகாப்பு மற்றும் ஒழுங்குமுறை தொடர்பான ஒருங்கிணைக்கும் அமைப்பு.
- ❖ உணவுப் பாதுகாப்பின் கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வையின் மூலம் பொது சுகாதாரத்தைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் FSSAI பொறுப்பு.

## பாதுகாப்பு

### அதிநவீன ராணுவ கருவியை ஒன்றிணைந்து தயாரிக்க இந்தியா மற்றும் பிரான்ஸ் முடிவு செய்துள்ளன.



- அண்மையில் பிரான்ஸுக்கு பிரதமர் மோடி மேற்கொண்ட பயணத்தின், பிரதிபலிப்பாகும்.
- பாதுகாப்புத் துறையில் ஒத்துழைப்பது என்பது இருநாடுகளுக்கும் எப்போதும் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது. பாதுகாப்பாக இருப்பதற்கு நல்ல கருவி மற்றும் தொழில்நுட்பங்கள் தேவை.
- பிரான்ஸிடம் இருந்து 26 ரஃபேல்–எம் போர் விமானங்கள், 3 ஸ்கார்பீன் நீர்மூழ்கிக் கப்பல்கள் வாங்க, பாதுகாப்புத் தளவாட கொள்முதல் கவுன்சில் அண்மையில் ஒப்புதல் அளித்தது.
- அவற்றின் விலை, தொழில்நுட்ப அம்சங்கள் குறித்து பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் பேச்சுவார்த்தைகள் நிறைவடைந்த பின்னர், இறுதி ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படும்'.

## விருதுகள் மற்றும் அங்கீகாரங்கள்

### 9 மாநில செயலாளர்களுக்கு 'பூமி சம்மான்' விருதுகளை வழங்கிய ஜனாதிபதி முர்மு



- டிஜிட்டல் இந்தியா நில பதிவுகள் நவீனமயமாக்கல் திட்டத்தை செயல்படுத்துவதில் சிறப்பான பங்களிப்பை வழங்கிய 9 மாநில செயலாளர்கள் மற்றும் 68 மாவட்ட கலெக்டர்களுக்கு 'பூமி சம்மான்' விருதுகளை ஜனாதிபதி திரவுபதி முர்மு வழங்கினார்.
- நில ஆவணங்களை டிஜிட்டல் மயமாக்குவது கிராமப்புறங்களின்
- வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கும் என ஜனாதிபதி முர்மு தெரிவித்தார்.
- மேலும் அவர், "கிராமப்புறங்களில் உள்ள பலர் தங்கள் மூதாதையர் பெயரில் நிலப் பதிவேடுகளை வைத்திருப்பதால், தகவல், ஆதாரங்கள் அல்லது தகராறுகள் காரணமாக பதிவுகளை மேற்கொள்ள முடியவில்லை. இது போன்ற வழக்குகளை அரசு ஆராய வேண்டும்" என வலியுறுத்தினார்.
- இந்த விழாவில் பேசிய மத்திய ஊரக வளர்ச்சித் துறை இணை மந்திரி பக்கன் சிங் குலாஸ்தே, "94 சதவீதத்துக்கும் அதிகமான நிலப் பதிவேடுகள் டிஜிட்டல்

SHANMUGAM IAS ACADEMY

மயமாக்கப்பட்டுவிட்டதாகவும், மீதமுள்ளவை மார்ச் 31, 2024–க்குள் முடிக்கப்படும்" என்றும் தெரிவித்தார்.

## செவாலியர் (நைட்) பட்டம்




- இந்திய இசைக்கலைஞர்கள் அருணா சாய்ராம் மற்றும் ஷஷாங்க் சுப்ரமணியம் ஆகியோருக்கு பிரான்ஸ் அரசாங்கம் செவாலியர் (நைட்) விருதை வழங்கியது
- de l'Ordre des Arts et des Lettres (ஆர்டர் ஆஃப் ஆர்ட்ஸ் அண்ட் லெட்டர்ஸ்) விருதுகள், பத்மஸ்ரீ விருது பெற்றவரும் கர்நாடக பாடகியுமான அருணா சாய்ராமுக்கு, மற்றும் ஷஷாங்க் சுப்ரமணியம், ஆகியோருக்கு வழங்கப்பட்டது.
- இது பிரான்ஸ் அரசாங்கத்தால் வழங்கப்படும் மிக முக்கியமான கலை–குறிப்பிட்ட கௌரவமாகும்
- இந்த விருது மூன்று நிலைகளில் வழங்கப்படுகிறது: தளபதி (கமாண்டர்), அதிகாரி (அதிகாரி), செவாலியர் (நைட்).

## மைவீத்ரி நிறுவனத்துக்கு சிறந்த பொது நல நிறுவன விருது



- "பாரத் சேவாக் சமாஜ்" என்ற மத்திய அரசு அமைப்பு தேசிய தலைவர்களான ஜவஹர்லால் நேரு, குல்சாரிலால் நந்தா உள்ளிட்டோரின் துணையுடன் 1952–60 தொடங்கப்பட்டு 5–வது திட்டக் கமிஷனால் அங்கீகரிக்கப்பட்ட அமைப்பாகும்.
- இந்த அமைப்பின் தேசிய சேர்மன் பி.எஸ்.பாலசந்திரன் உத்தரவின்படி சிறப்பு பயிற்சி வகுப்பு திருவனந்தபுரத்தில் நடைபெற்றது. இதில் பாரத் சேவாக் சமாஜ் மாற்று மருத்துவவேந்தரான சுசான்லி சி.ஏ.ரவி, சித்வா குழும சேர்மன் எஸ்.வி.விஜயராகவ், பாரத் சேவாக் சமாஜ் வழி காட்டி பேராசிரியர் டார்வி கோஷி மற்றும் மைவீத்ரி நிறுவனத்தின் மருத்துவர் எம். சக்தி ஆனந்தன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.
- மைவீத்ரி நிறுவனம் 32 லட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இதைப் பாராட்டும் வகையில் மைவீத்ரி நிறுவன அதிபர் எம்.சக்தி ஆனந்தனுக்கு 'தொழில்முனைவோரின் சிறந்த வழிகாட்டி' என்ற விருது வழங்கப்பட்டுள்ளது. மேலும் 'சிறந்த பொது நிறுவனம் நல நிறுவனம்' என்ற விருது லட்சத்துக்கும் மைவீத்ரி நிறுவனத்துக்கு கிடைத்துள்ளது.
- மேலும் பாரத் சேவாக் சமாஜ் அகில இந்திய சேர்மனுக்கு 'பாரத் சேவக் சமாஜின் பாதுகாவலர்' விருதும், பாரம்பரிய மருத் துவத்தில் தனித்துவம் பெற்ற டாக்டர்

SHANMUGAM IAS ACADEMY

எஸ்.வி.விஜய ராகவுக்கு தெய்வீக இயற்கை மருத்துவத்தின் சிறப்பு மருத் துவர்' விருதும் வழங்கப் பட்டது.

## விளையாட்டு

### சாத்விக் ராஜ் புதிய உலக சாதனை



- இந்திய பாட்மின்டன் வீரர், "சாத்விக்சாய் ராஜ்" மணிக்கு 565 கிலோ மீட்டர் வேகத்தில் ஸ்மாஷ் விளாசி புதிய உலக சாதனை படைத்திருக்கிறார்.
- போட்டியில் அல்லாமல் சாதனை முயற்சிக்காக ஒருங்கிணைக்கப்பட்ட சூழலில் அவர் இந்த சாதனையை எட்டியிருக்கிறார்.
- ஜப்பானின் சாய்டாமா நகரில், விளையாட்டு உபகரணங்கள் தயாரிப்பு நிறுவனமான யோனெக்ஸின் உற்பத்தி தொழிற்சாலை விளையாட்டரங்கில் இந்த உலக சாதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- இது கடந்த ஏப்ரல் 14–ஆம் தேதி மேற்கொள்ளப்பட்ட சாதனையாகும்.
- ஆடவர் பிரிவில் இதற்கு முன், மலேசியாவின் டான் பூன் ஹியோங் கடந்த 2013 மே மா தத்தில் 493 கி.மீ. வேகத்தில் ஸ்மாஷ் விளாசியதே அதிகபட்சமாக இருந்தது.
- தற்போது சாத் விக்சாய்ராஜ் அதைவிட 72 கி.மீ. அதிக வேகத்தில் ஸ்மாஷ் விளாசி 565 கிலோ மீட்டரை எட்டிபுதிய சாதனை படைத்திருக்கிறார்.
- மகளிர் பிரிவில், மலேசிய வீராங்கனை டேன் பியர்லி 438 கிலோ மீட்டர் வேகத்தில் ஸ்மாஷ் விளாசி சாதனை படைத்துள்ளார்.

### தேசிய சப் ஜூனியர் மற்றும் ஜூனியர் டைவிங் மற்றும் வாட்டர் போலோ



- தேசிய சப் ஜூனியர் மற்றும் ஜூனியர் டைவிங் மற்றும் வாட்டர் போலோ போட்டிகள் சென்னையில் தொடங்கியது.டைவிங் போட்டியில் குரூப்–1 சிறுவர்களுக்கான (16,17,18 வயது) 3 மீட்டர் ஸ்பிரிங் போர்டு பிரிவில், தமிழக வீரர் "அபிஷேக்" 369.15 புள்ளிகள் பெற்று வெள்ளிப் பதக்கம் பெற்றார். இதில் "இண்டிவிர் சாய் ராம் 415.20 புள்ளிகள் எடுத்து தங்கப் பதக்கம் பெற்றார்.
- இதே வயது பிரிவில் சிறுமியருக்கான போட்டியில் மத்திய பிரதேச வீராங்கனை "பாலக் சர்மா" 292 புள்ளிகள் எடுத்து முதலிடமும், பெங்கால் வீராங்கனை "அனுஷா தாரா" 257 புள்ளி பெற்று 2–ஆவது இடமும் பிடித்தனர்.
- ஜூனியர் தேசிய வாட்டர் போலோவில், சிறுவர்கள் பிரிவில் மேற்கு வங்க அணி 22–2 என ஹரியாணாவையும், குஜராத் அணி 12–5 என தமிழக அணியையும் வென்றன.

SHANMUGAM IAS ACADEMY

- சிறுமியர் பிரிவில் கேரள அணி 18– 1 என டெல்லியையும், கர்நாட கம் 26–1 என தமிழக அணியையும் தோற்கடித்தன.

## உலக துப்பாக்கி சுடுதல்: முதலிடத்தில் இந்தியா



- தென் கொரியாவில் நடைபெறும், ஜூனியர் உலக துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் போட்டிகளில்,ஆடவர் 10 மீட்டர் ஏர் ரைஃபிள் கலப்பு அணிகள் பிரிவில் "இந்தியாவின் பார்த் மனே, அபினவ் ஷா, தனுஷ் ஸ்ரீகாந்த்" ஆகியோர் அடங்கிய கூட்டணி தங்கப் பதக்கம் வென்றது. இந்திய அணி 1,886.7 புள்ளிகளுடன் முதலிடத்தைப் பிடிக்க, சீனா 2–ஆம் இடமும் (1,883.5), தென் கொரியா 3– ஆம் இடமும் பிடித்தன.
- அதிலேயே மகளிர் பிரிவில் "கௌதமி பனோத், சோனம் மஸ்கர், ஸ்வாதி சௌதரி" கூட்டணி 1,886.8 புள்ளிகளுடன் வெள்ளிப் பதக்கம் வென்றனர்.
- ஆடவர் 10 மீட்டர் ஏர் ரைஃபிள் தனிநபர் பிரிவு தகுதிச்சுற்றில், "உமாமகேஷ்" 229 புள்ளிகளுடன் வெண்கலப் பதக்கம் பெற்றார். மகளிருக்கான 10 மீட்டர் ஏர் ரைஃபிள் தனிநபர் பிரிவில் "சோனம் மஸ்கர் இறுதிச்சுற்றுக்கு வந்து, அதில் 7–ஆம் இடம் பிடித்தார்.
- ஆடவர் ஸ்கீட் பிரிவில் 6 இந்தியர்கள் பங்கேற்க, அதில் "ஹர்மெஹர் லாலி" மட்டும் இறுதிச்சுற்றுக்கு முன்னேறி 5–ஆம் இடம் பிடித்தார்.
- மகளிர் ஸ்கீட் பிரிவில் "ராய்ஸா தில்லன்" வெள்ளிப் பதக்கத்தை கைப்பற்றினார்.

## காதுகேளாதோர் பேட்மிண்டனில் இந்தியா சாம்பியன்



- காது கேளாதோருக்கான உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டி பிரேசிலில் நடந்து வருகிறது. இதன் கலப்பு அணிகள் பிரிவின் இறுதி ஆட்டத்தில் இந்தியா 3–1 என்ற கணக்கில் ஜப்பானை வீழ்த்தி தங்கப்பதக்கத்தை கைப்பற்றியது.
- இந்திய அணியில் தமிழகத்தை சேர்ந்த "ஜெர்லின் அனிகாவும்" இடம் பெற்றுள்ளார்.

## காமன்வெல்த் சீனியர் ஜூனியர் & யூத் பளுதூக்குதல் சாம்பியன்ஷிப் 2023: சீனியர் பிரிவில் இந்தியா 20 பதக்கங்களை வென்றது



- இந்தியாவின் உத்தரபிரதேசத்தின் கிரேட்டர் நொய்டாவில் உள்ள கௌதம் புத்தர் பல்கலைக்கழகத்தில் 2023 காமன்வெல்த் சீனியர், ஜூனியர் மற்றும் யூத் சாம்பியன்ஷிப் போட்டிகளில் இந்திய மூத்த பளுதூக்குதல் குழு 20 பதக்கங்களை (9 தங்கம், 9 வெள்ளி மற்றும் 2 வெண்கலம்) வென்றது.

SHANMUGAM IAS ACADEMY

- இந்திய அணி சீனியர், ஜூனியர் மற்றும் யூத் பிரிவுகளில் மொத்தம் 61 பதக்கங்களை (38 தங்கம், 21 வெள்ளி மற்றும் 2 வெண்கலம்) வென்றது.
- 2023 ஜூலை 12 முதல் ஜூலை 16 வரை ஜூனியர், யூத் மற்றும் சீனியர் பிரிவுகளில் 20 நாடுகளைச் சேர்ந்த 250 பளுதூக்கும் வீரர்கள் கலந்து கொண்டனர்.
- குறிப்பு: உஸ்பெகிஸ்தானின் தாஷ்கண்டில் நடைபெற்ற காமன்வெல்த் பளு தூக்குதல் சாம்பியன்ஷிப் 2021 இல் இந்தியா 16 பதக்கங்களை (4 தங்கம், 7 வெள்ளி மற்றும் 5 வெண்கலம்) வென்றது.
- இந்தியா கடைசியாக 2015ல் புனேவில் போட்டியை நடத்தியது.

## புத்தகங்கள் & ஆசிரியர்கள்

### 'த்ரூ தி ப்ரோகன் கிளாஸ்



- 'த்ரூ தி ப்ரோகன் கிளாஸ்: இந்திய முன்னாள் தலைமை தேர்தல் ஆணையர் (CEC) சேஷனின் சுயசரிதையாகும். இதை ரூபா பப்ளிகேஷன்ஸ் இந்தியா வெளியிட்டது.
- இந்த சுயசரிதை 1990 முதல் 1995 வரையிலான CEC ஆக இருந்த அவரது பதவிக்காலத்தை 368 பக்க எண்ணிக்கையுடன் உள்ளடக்கியது. 2019 இல் அவர் இறந்து 4 ஆண்டுகளுக்குப் பிறகு இது வெளியிடப்பட்டுள்ளது.
- தனது தொழில் வாழ்க்கையின் ஆரம்ப காலத்தில், திண்டுக்கல்லில் சப்–கலெக்டராகவும், பின்னர் தமிழ்நாட்டின் மதுரையில் கலெக்டராகவும் பதவியேற்றதை விவரித்தார்.

## அறிவியல் & தொழில்நுட்பம்

### 'போல்கோடின்' மருந்தால் எதிர்விளைவு மருந்து தரக் கட்டுப்பாட்டு வாரியம் எச்சரிக்கை



- உலக சுகாதார அமைப்பு சார்பில் அண்மையில் மருந்து தொடர்பான வெளியிடப்பட்ட எச்சரிக்கை செய்தியில், சளி மற்றும் இருமலுக்காக பயன்படுத்தப்படும் 'போல் கோடின்' என்ற மருந்தை உட்கொண்டவர்களுக்கு, அதற்கு அடுத்த 12 மாதங்களில் மயக்கவியல் மருந்தை செலுத்தும்போது கடுமையான பக்க விளைவு ஏற்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இதையடுத்து, பல்வேறு மருந்து ஒழுங்குமுறை ஆணையங்கள் அந்த மருந்தை திரும்பப்பெற்றுள்ளன.
- நோயாளிகளும் அந்த மருந்தை மருத்துவரின் பரிந்துரையின்றி உட்கொள்ளுதல் கூடாது. அறுவை சிகிச்சை மேற்கொள்ளும்

SHANMUGAM IAS ACADEMY

- நோயாளிகள், 'போல் கோடின்' மருந்தை கடந்த 12 மாதங்களுக்குள் எடுத்திருந்தால், அது தொடர்பாக மருத்துவர்களிடம் தகவல் தெரிவிக்க வேண்டும்.

## சுற்றுச்சூழல் மற்றும் உயிர் பன்முகத்தன்மை

### ராம்கர் விஷ்தாரி சரணாலயம்.

- 52வது புலிகள் காப்பகம் ராஜஸ்தானின் புகழ்பெற்ற ரந்தம்போர் புலிகள்
- காப்பகத்திற்கும் முகுந்த்ரா ஹில்ஸ் புலிகளுக்கும் இடையில் அமைந்துள்ளது.
- இந்த உயிரியல் பூங்காவில் புதிய குட்டிகள் பிறந்த பிறகு புலிகளின் எண்ணிக்கை 5 ஆக உயர்ந்தது.

## தமிழக நடப்பு விவகாரங்கள்

- **நான் முதல்வன்– 'உயா்வுக்குப் படி'** திட்டத்தின் கீழ் பிளஸ் 2 முடித்து இடைநின்ற மாணவா்களில் 15,713 மாணவா்கள் கண்டறியப்பட்டு கல்வி நிலையங்களில் சோ்க்கப்பட்டுள்ளதாக பள்ளிக் கல்வித்துறை தெரிவித்துள்ளதுதிட்டத்தின் கீழ் பிளஸ் 2 முடித்து இடைநின்ற மாணவா்களில் 15,713 மாணவா்கள் கண்டறியப்பட்டு கல்வி நிலையங்களில் சோ்க்கப்பட்டுள்ளதாக பள்ளிக் கல்வித்துறை தெரிவித்துள்ளது.
- நான் முதல்வன் திட்டம், மாநில இளைஞர்களுக்காக 1 மார்ச் 2022 அன்று செயல்படுத்தப்பட்டது.
- இத்திட்டத்தின் மூலம், மாநிலம் முழுவதும் ஆண்டுதோறும் 10 லட்சம் இளைஞர்களின் திறன்களை அரசு மேம்படுத்தி, அவர்களின் திறன்களை மேலும் மேம்படுத்த முடியும்.
- இத்திட்டத்தின் மூலம், அரசு மற்றும் மாநிலத்தில் நடத்தப்படும் கல்வி நிறுவனங்களில் சிறந்து விளங்கும் மாணவர்களுக்கு கல்வி வழிகாட்டுதல் வழங்கப்படும்.

## தேசிய நிகழ்வுகள்

### ஹென்லி பாஸ்போர்ட் இன்டெக்ஸ் 2023 :

- சர்வதேச விமானப் போக்குவரத்து சங்கம் (IATA) இலிருந்து பெறப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டது
- இந்த ஆண்டிற்கான, குறியீட்டில் சிங்கப்பூர் முதல் இடத்தைப் பிடித்தது.
- ஜெர்மனி, இத்தாலி மற்றும் ஸ்பெயின் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளன, மேலும்
- ஜப்பான் மூன்றாவது இடத்தில் உள்ளது
- குறியீட்டில் இந்தியா 85வது இடத்தில் உள்ளது.

SHANMUGAM IAS ACADEMY

SHANMUGAM IAS ACADEMY